


# ஒன் ஷோல்டர் டிரெஸ்

*இந்த டுடோரியலில், ஒரு ஒன் ஷோல்டர் டிரெஸ் எப்படி உருவாக்குவது என்று கற்றுக்கொள்வோம்.*




### தேவைப்படும் பொருள்கள்

45 "அகலத்துல பிரைட்டான துணி 3 மீட்டர். நாங்கள் ஒரு சீக்குவின் துணிய தேர்ந்தெடுதிருக்கோம்.
45" அகலத்துல 4 மீட்டர் வெள்ளை சாடின் துணி.
45" அகலத்துல 4 மீட்டர் வெள்ளை லைனிங் துணி
2.5 மீட்டர் கேன் கேன்
ஒன் ஷோல்டர் டிரெஸ்க்கான டெம்ப்ளேட், இதை நீங்க www.ushasew.comங்கற வெப்சைட்டிலிருந்து டவுன்லோட் செய்துக்கலாம்.
மணிகள் கோர்த்த பின்ஸ்
சாக்
கத்தரிக்கோல்
இன்ஞ்ச் டேப்
மாட்சிங் நூல்
8 இன்ஞ்ச் கன்சீல்ட் ஜிப்பர்
உஷா ஜனோம் ஜிப்பர் ஃபூட்




துணிய டெம்ப்ளேட்படி தைக்க நாம கத்துக்கலாம், மெயின், சாடின் அப்புறம் லைனிங் ஸ்கர்ட் பீசஸ், தொடர்ந்து யோக் அப்புறம் கடைசியா அந்த யோக்-அ ஜிப்பரோட சேர்த்து ஸ்கர்ட்ல அட்டாச் பண்ணலாம்.



### ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மார்கிங் & துணி கட்டிங்

வாங்க தொடங்கலாம். ஸ்கர்ட் போர்ஷனுக்கு கலர்ஃபுல்லான பிரகாரசமான துணிய தேர்ந்தெடுங்க. முழுசா விரிச்சு, பிரின்ட் செய்த பக்கம் உங்களை நோக்கி இருக்க மாதிரி வைச்சிட்டு ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்க மாதிரி நீளவாக்குல பாதியா மடிங்க. இதுதான் ராங் சைட். இதுதான் துணி மடிப்பு.






இப்ப www.ushasew.com ல் இருந்து டவுன்லோட் செய்த ஸ்கர்ட் டெம்ப்ளேட்ட துணி மேல வையுங்க, அப்டி வைக்கறப்ப மடிப்புல மென்ஷன் பண்ணின சைட் இதுல காட்டியிருக்க மாதிரி துணி மடிப்பு மேல வருதான்னு செய்துக்கொங்க . மணி கோர்த்த பின்சால சரியான இடத்தில் வைச்சு பின் பண்ணலாம். இது முடிஞ்சதும், துணில் பின் பண்ணின டெம்ப்ளேட்ட ட்ரேஸ் பண்ணுங்க. ஸ்கர்ட்டோட வளைவுல கூடுதல் கவனம் செலுத்துங்க. மார்க்கிங் முடிஞ்சதும் டெம்ப்ளேட்டிலிருந்து பின்-அ எடுத்துட்டு அதை தனியா வையுங்க.

அடுத்து, ட்ரேஸ் பண்ணின டெம்ப்ளேட்ட கத்தரிக்கோலால கட் பண்ணுங்க, இது துணியோட ராங் சைட் இது ரைட் சைட். ஸ்கர்ட்டோட ஒரு பக்கம் மடிப்பு மேல இருக்கிறதை நீங்க பாக்கலாம்.








அதே மாதிரி, ஸ்கர்ட்டுக்கான இன்னொரு பீசை மெயின் டெம்ப்ளேட்டிலிருந்து கட் பண்ணுவோம். இப்ப இதே டெம்ப்ளேட்ட யூஸ் பண்ணி இதே ஃபேஷன்ல சாடின் அப்புறம் லைனிங் துணியையும்கூட கட் பண்ணனும். மொத்தமா நம்பகிட்ட லைனிங், சாடின் அப்புறம் மெயின் துணிகள் ஒவ்வொண்ணுலயும் ரெண்டு பீசஸ் இருக்கும்.

இப்ப நாம ஸ்கர்ட்டோட எல்லா பீஸசையும் முடிச்சிட்டோம், இப்ப டிரெஸ்சோட டாப்-க்கு போறோம். சாடின் துணிய எடுத்துட்டு ரைட் சைட், ரை சைட்-அ நோக்கியிருக்கற மாதிரி மடிங்க. அதுக்கு மேல யோக் டெம்ப்ளேட்ட வையுங்க. மணி கோர்த்த பின்ஸ யூஸ் பண்ணி துணில டெம்ப்ளேட்ட பின் பண்ணுங்க. துணியோட ரெண்டு அடுக்குகள் வழியாவும் பின் நுழையுதான்னு நிச்சயம் செய்துக்கங்க. அப்புறம் சாக்கால டெம்ப் துணில ட்ரேஸ் பண்ணுங்க. செய்து முடிஞ்சதும் டெம்ப்ளேட்டிலிருந்து பின்-அ எடுத்துட்டு தனியா வையுங்க. கூடுதல் உறுதிக்கு தேவைப்பட்டா துணிய மறுபடியும் பின் பண்ணலாம் கத்தரிக்கோலை எடுத்துகிட்டு யோக் பீசை கட் பண்ணுங்க. வளைவான விளிம்புகள்ல கூடுதல் கவனம் செலுத்துங்க. யோக்கிலிருந்து பின்-அ நீக்கிருங்க, இப்ப உங்ககிட்ட மாறுபட்ட ரெண்டு பீசஸ் இருக்கும். லைனிங் துணிலயும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க , இப்ப உங்ககிட்ட சாடின் துணியிலிருந்து 2, லைனிங் துணியிலிருந்து 2ன்னு மொத்தம் மாறுபட்ட நாலு யோக் பீசஸ் இருக்கும்.

## ஸ்டெப் 2 மெயின் மற்றும் சாடின் ஸ்கர்ட் பீசஸ் உருவாக்குதல்











மெயின் துணிய பிரிச்சு முன் பக்கத்து மேல பின் துனிய வெச்சு விளிம்புகளை சரியா மேட்ச் பண்ணனும். இது துணியோட ராங் சைட் இது ரைட் சைட்ங்கறதை ஞாபகம் வைச்சிக்கங்க . துணிகள் ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்க மாதிரி இருக்கணும். டுடோரியல்ல குறிப்பிட்டிருக்க மாதிரி சைட் சீம்ஸ தைக்கணும். தைக்க சுலபமா இருக்க ரெண்டு துணிகளையும் ஒன்ணா பின் பண்ணனும். இன்னொரு பக்கத்துக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணனும். விளிம்புகளை மேட்ச் பண்ணி, சரியான இடத்தில வைச்சு பின் பண்ணுங்க. ஆனா தைக்கறதுக்கு முன்னால, ஜிப்பருக்காக டாப்லேந்து 2.5 இன்ஞ்ச் அளந்து மார்க் பண்ணிக்கணும். இந்த மார்க்லேந்து நாம தைக்கத் தொடங்கணும், டாப்-அ ஓபனா விட்ரணும் இந்த மார்க்ல பின் பண்ணனும்.

இதைச் செய்து முடிச்சதும், மெயின் துணிய தனியா வெச்சிட்டு சாடின் துணிலயும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க, எட்ஜஸ மேட்ச் பண்ணிட்டு பின் பண்ணிருங்க. 2.5 இன்ஞ்ச் ஜிப்பர் இடைவெளிய மார்க் பண்ணிட்டு அந்த மார்க்ல பின் பண்ணுங்க. நாம சைட் சீம்ஸ தைச்சு அப்புறம் பாட்டம் ஹெம்மையும் முடிக்கணும்.

பிரஸ்ஸர் ஃபூட் அடியில துணி விளிம்பை அலைன் பண்ணிட்டு தைக்க ஆரம்பிங்க. கொஞ்சம் ரிவர்ஸ் ஸ்ட்ரிச்சிலிருந்து தொடங்கி ஸ்கர்ட் டாப் நோக்கி மெதுவா, சீரா தைச்சிட்டே போங்க. ஜிப்பருக்காக நாம விட்டிருக்கற 2.5 அங்குல மார்க்ல நிறுத்துங்க. நிறுத்தறதுக்கு முன்னால, நேர் தையல் பிரியாம இருக்க ஒருசில ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடுங்க. நூல் அப்புறம் உபரி துணி ஏதாவது இருந்தா கட் பண்ணிட்டு, மெயின் துணியோட அடுத்த பக்கத்துக்கு போங்க.












அடுத்த பக்கத்தை முழுசா தையுங்க. தைச்சு முடிச்சதும், மெயின் துணிய தனியா எடுத்து வெச்சிட்டு, சாடின் துணியோட சைட் சீம்ஸ தையுங்க. இதையும்கூட முழுசா தைச்சிருங்க தைக்கறப்பவே பின்ஸயும் நீக்கிட்டே போங்க. சாடின் துணியோட இன்னொரு பக்கத்துலயும் அதே பிராசஸ ரிபீட் பண்ணனும் ஆனா மெயின் துணில செய்தா மாதிரியே மறக்காம முடியற எடத்துல டாப்லேந்து 2.5 அங்குல இடைவெளி விடணும்.

இந்த வேலை முடிஞ்சதும், ஜிக் ஜாக் தையல் போட பேட்டன் செலக்டார் டயலை 'சி'க்கும் தையல் நீளத்தை 1.5க்கு செட் பண்ணிட்டு விளிம்புல தைக்கத் தொடங்குங்க. பட்டு துணி நூல் பிரிஞ்சி வர்றதை தடுக்க ஜிக் ஜாக் தையல் உதவும். 2.5 அங்குல இடைவெளிக்கு வந்ததும் தைக்கறதை நிறுத்திட்டு நூலை கட் பண்ணிருங்க. ஒவ்வொரு அடுக்குலயும் தனித்தனியா தைக்கணும். டாப் லேயரை பிரஸ்ஸர் பூட்டுக்கு அடியில வெச்சு தைக்க தொடங்குங்க. நூலை கட் பண்ணிட்டு இதையே பாட்டம் லேயருக்கும் ரிபீட் பண்ணுங்க. அது முடிஞ்சதும் ஸ்கர்ட்டோட இன்னொரு விளிம்புக்கும் ஜிக் ஜாக் தையல ரிபீட் பண்ணுங்க. இப்ப சைட் சீம்ஸ் முடிஞ்சிருச்சு. பாட்டம் ஹெம்முக்கு போகலாம்.











டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி, அடிப்பகுதிய ரெண்டு தடவை அரை அங்குலத்துக்கு மடியுங்க. நாம மடிப்பு மேல தைப்போம். துணிய பிரஸ்ஸர் பூட்டுக்கு அடியில வெக்கணும், ஆனா தைக்க ஆரம்பிக்கறதுக்கு முன்னால, நேர் தையலுக்காக பேட்டன் செலக்டாரை 'ஏ'க்கும் தையல் நீளத்தை 2.5க்கு மறுபடியும் மாத்திக்கணும். தைக்க ஆரம்பிங்க. அடிப்பகுதிய சுற்றி தைச்சிட்டே போகறப்ப மடிச்சிட்டே வரணும். தைச்சு முடிச்சதும், நூலை கட் பண்ணிருங்க. தெச்சு முடிச்சதும் அது பாக்க இப்டி இருக்கணும். அதே போல, மெயின் துணியின் பாட்டம் ஹெம் பண்ற வேலைய பாக்கணும். அடிப்பகுதிலேந்து துணிய கால் அங்குலத்துக்கு ரெண்டு தடவை மடிச்சிகிட்டு, மடிப்புமேல தையுங்க. துணி மென்மையா இருக்கறதால, தைக்கறப்ப மென்மையா மடிச்சிட்டே தையுங்க.

சாடின் துணில சைட் சீம்ஸ்யும் பாட்டம் ஹெம்மையும் முடிச்சிட்டதை நீங்க பாக்கலாம். மெயின் துணிலகூட, பக்கங்களை தைச்சிட்டு பாட்டமை ஹெம் பண்ணிட்டோம்.

**ஸ்டெப் 3 கேன் கேன்-உடன் லைனின் துணி உருவாக்குதல்**










இப்ப நாம லைனிங் துணிய எடுத்துக்கலாம். இப்ப நம்பகிட்ட 2 பீஸ் லைனிங் துணி இருக்கணும், ஒன்னு முன் பக்கத்துக்கும் இன்னொண்ணு பின்பக்கத்துக்கும்; ஆனா இப்போதைக்கு, ஒன்றை எடுக்கலாம். 2.5 மீட்டர் கேன் கேன்-ஐ எடுங்க. பாதியா மடிச்சு கட் பண்ணுங்க. ஒரு பாதிய தனியா வெச்சிட்டு இன்னொரு பாதிய எடுத்து அதை பாதியா மடியுங்க. இதை நாம லைனிங் துணில அட்டாச் பண்ணுவோம் ஆனா அதுக்கு முன்னால, லைனிங் துணி டாப்லேந்து நாலு அங்குலத்தை மார்க் பண்ணிக்கணும். இதை ஸ்கர்ட் பீசோட வெயிஸ்ட்லைன் முழுவதும் செய்யணும். லைனிங் துணிய ஓபன் பண்ணி டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி தொடர்ந்து நாலு அங்குலத்துக்கு மார்க் பண்ணுங்க.















செய்து முடிச்சதும், கேன் கேன் துணிய வெளிய எடுங்க அது 1¼ மீட்டர் இருக்கணும், அதை பாதியா மடியுங்க. டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி கேன் கேன் துணிய லைனிங் துணியோட நாலு இன்ஞ்ச் மார்க்ஸ்ல பின் பண்ணுங்க. துணிய பின் பண்ணிட்டே கேன் கேன் துணில ப்ளீட்ஸ் உருவாக்கணும். ப்ளீட்சோட அளவு ¾ இன்ஞ்ச் இருக்கணும். துணியோட நடுப்பகுதிக்கு வந்ததும், முடியற எடத்துக்கு போய் அங்கேந்து இந்த பிராசஸ மறுபடியும் தொடங்குங்க அப்பதான் ப்ளீட்ஸ நடுவுல அட்ஜஸ்ட் பண்ண முடியும். . இதே பிராசஸ லைனிங் துணியோட இன்னொரு பீஸ்லயும் ரிபீட் பண்ணனும். இன்னொரு பீஸ் தயாராகிருச்சுன்னா, ரெண்டு லைனிங் பீசஸயும் ஒன்னா இணைக்கணும். ரெண்டு துணிகளையும் ஒன்னு மேல ஒன்னா வையுங்க, ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி, இப்ப ப்ளீட்ஸ், சைட் சீம்ஸ் அப்றம் பாட்டம் ஹெம் தைக்க வேண்டிய நேரம்.

பின் பண்ணின துணிய தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. ஒரு லைனிங் துணிய எடுத்து, தைக்கத் தொடங்குங்க. ப்ளீட்ஸ மெதுவா தைச்சிட்டே பின்ஸ நீக்கிட்டே போங்க, இந்த பிராசஸ் கொஞ்சம் ட்ரிக்கியா இருக்கும், தைக்கறப்ப விரல்கள்ல காயம் படறதை தவிர்க்க எச்சரிக்கையா இருங்க. இன்னொரு துணிக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. நீங்க தைச்ச ப்ளீட்ஸ் பாக்க இப்படி இருக்கணும். இப்ப ரெண்டு துணிகளோட சைட் சீம்ஸ அலைன் பண்ணுங்க. பிரஸ்ஸர் ஃபூட் அடியில துணிகளை அலைன் பண்ணிட்டு தைக்க ஆரம்பிங்க. இடுப்புலேந்து தொடங்கி பாட்டம் வரை தையுங்க. முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க.

இன்னொரு பக்கத்தில தைக்க தொடங்கறப்ப ஜிப்பருக்காக டாப்லேந்து 2.5 அங்குலம் விட்டுட்டு தைக்கணுங்கறதை மறக்காதீங்க. தையல் பிரிஞ்சு போகாம இருக்க ஆரம்பத்திலயும் முடியற எடத்திலயும் ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க. முன்ன மாதிரியே, ரெண்டு தடவை துணிய அரை அங்குலம் மடியுங்க. துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில அட்ஜஸ்ட் பண்ணி மடிப்பு மேல தையுங்க. துணிய சுற்றிலும் மடிச்சுகிட்டே தையுங்க.

நாம கேன் கேன்-ஐ லைனிங் துணில அட்டாச் பண்ணி சைட் சீம்ஸ தைச்சிட்டோங்கறதை நீங்க பாக்கலாம்.











**ஸ்டெப் 4 யோக் தயாரித்தல்**

ஒன் ஷோல்டர் டிரெஸ்சோட டாப் போர்ஷனை இப்ப பாக்கலாம். நமக்கு சாடின், லைனிங் ரெண்டு துணியும் ரெடி. ஷோல்டர்ஸ் மேல தைச்சு பீசஸ அட்டாச் பண்ணிரலாம். லைனிங் துணியோட முன் பக்கத்தை பேக் பீஸ் மேல வையுங்க, ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்கணும். லைனிங் துணிகளோட ஷோல்டரை ஒன்னா சேர்த்து பின் பண்ணுங்க. அப்புறம் மெயின் துணிய ஒன்னா பின் பண்ணுங்க. பின் பண்ணின துணிய தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. சாடின் துணி ஷோல்டரோட விளிம்பை பிரஸ்ஸர் பூட்டுக்கு அலைன் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிங்க. ரிவர்ஸ் தையல் போட மறக்காதீங்க. இது முடிச்சதும், நூலை கட் பண்ணிட்டு லைனிங் துணி ஷோல்டர்சையும் தையுங்க.

லைனிங், மெயின் துணி ரெண்டுலயும் ஷோல்டர்ஸ தைச்சிட்டோம் பாருங்க.








இப்ப துணிய விரிச்சு, லைனிங் துணிய சாடின் துணி மேல ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்க மாதிரி வையுங்க. இப்ப நாம ஆர்ம் ஹோல், நெக் லைன், சைட் சீம் தைக்கணும். முதல்ல ஆர்ம் ஹோலை தைக்கலாம், துணிய பிரஸ்ஸர் பூட்டுக்கு அடில அலைன் பண்ணிகிட்டு தைக்கத் தொடங்குங்க. அடுத்து, நெக்லைனை தைக்கணும். இது முடிஞ்சதும், சர்குலர் பிரிவுகள்ல நோட்சஸ் உருவாக்கணும், இவற்ற ஆர்ம்ஹோல், அப்றம் நெக்லைன்லயும்கூட செய்யணும், அப்பதான் உடுத்திக்கறப்ப துணி தொய்ந்து போகாம இருக்கும். இதை தையலை கட் பண்ணிராம கவனமா செய்யணும். செய்து முடிச்சதும், துணிய அடிலேந்து திருப்பிகிட்டு வளைஞ்ச சீம்ஸ்ல மென்மையா பிரஸ் பண்ணனும்.. இப்ப நெக்லைன்ல ஒரு ¼" டாப் தையல் போடுவோம். துணிய பிரஸ்ஸர் பூட்டுக்கு அடில வெச்சு தைக்கத் தொடங்குங்க நெக்லைன் தைச்சு முடிஞ்சதும், ஆர்ஹோல் செக்ஷன்லயும் டாப் ஸ்டிரிச்-அ ரிபீட் பண்ணுங்க.

இப்ப சைட் சீம் வேலைய பாக்கலாம். இப்போதைக்கு ஒரே ஒரு சைட் சீம்-அதான் தைக்கணும். ஆரம்பத்திலயும் முடியற எடத்திலயும் ரிவர்ஸ் ஸ்டிரிச் போட மறக்காதீங்க.


நீங்க தைச்சு முடிச்சது பாக்க இப்படி இருக்கணும், இன்னும் நாம இன்னொரு சைட் சீம் தைக்கணும், ஆனா, அதுக்கு முன்னால, யோக்-ல ஸ்கர்ட்ட அட்டாச் பண்ணிரணும்.

**ஸ்டெப் 5 யோக்-ஐ ஸ்கர்ட்டுடன் அட்டாச் செய்தல்**







இப்போதைக்கு யோக்-அ தனியா வெச்சிருங்க, ஸ்கர்ட் தயார் பண்ணிரலாம். டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி லைனிங் துணிய டேபிள் மேல வையுங்க, அதுக்கு மேல சாடின் துணிய வைங்க, அதுக்கு அப்றம் மெயின் துணிய வையுங்க. எல்லா துணிகளோட இடுப்பையும் அலைன் பண்ணி மணிகோர்த்த பின் வெச்சு பின் பண்ணுங்க. பின் பண்ணின பிறகு, டேபிள் மேல ஃபிளாட்டா வையுங்க, ஜிப்பரோட ஓபனிங் தெரியறதை நீங்க பாக்கலாம்.

அடுத்தது, யோக் பீஸ-அ எடுங்க. யோக் வெய்ஸ்ட்லைனை ஸ்கர்ட்டோட வெய்ஸ்ட்லைனோட ரைட் சைட், ரைட் சைட் நோக்கி இருக்க மாதிரி பின் பண்ணனும். இடுப்பை சுத்தி பின் பண்ணுங்க. துணியோட எல்லா அடுக்குலயும் பின் நுழையுதான்னு உறுதி செய்துக்கங்க. அதோட ஜிப்பரையும் ஓபனிங்கல அட்டாச் பண்ணனும்.


எல்லா பீசஸ்யும் தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. ஸ்கர்ட் பீசஸ் எல்லாத்தையும் யோக்-ல அலைன் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிங்க. ஆரம்பத்திலயும் முடியற எடத்திலயும் ரிவர்ஸ் ஸ்டிரிச் போட மறக்காதீங்க. யோக்-கோட துணி பீசஸ் எல்லாத்தையும் சேர்த்து தைக்கறோமான்னு உறுதி செய்துக்கங்க.

நேர் தையல் முடிஞ்சிருச்சு, ஃபினிஷிங் நேர்த்தியா இருக்க ஒரு சவுன்ட் ஜிக் ஜாக் தையல் போட்ருங்க. பேட்டன் செலக்டார் டயலை 'சி'க்கும் தையல் நீளத்தை 1.5க்கு செட் பண்ணிட்டு தைக்கத் தொடங்குங்க. ஜிக் ஜாக் தையலுக்கு ரிவர்ஸ் ஸ்டிரிச் போட தேவையில்லை.














இது முடிஞ்சதும், நீங்க தைச்சது பாக்க இப்டி இருக்கணும். இப்ப, ஜிப் அட்டாச் பண்ண, ஜிப்போட ரைட் சைட் துணியோட ரைட் சைட் மேல வெச்சு தைக்காத பக்கத்தில பின் பண்ணுங்க. ஜிப்பரை டிரஸ்ல வெச்சு தைக்க உங்க உஷா ஜானோம் மை ஃபேப் பார்பி தையல் மிஷினோட ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு பதிலா ஜிப்பர் ஃபூட்ட ரீப்ளேஸ் பண்ணுங்க. நேர் தையலுக்காக பேட்டன் செலக்டாரை ‘ஏ’க்கும் தையல் நீளத்தை 2.5க்கு ரீசெட் பண்ணிக்கங்க. ஜிப்பரை ஓபன் பண்ணிட்டு ஜிப்பரோட ஒரு பக்கத்தை டிரஸ்சோட ஒரு பக்கத்து மேல வெச்சு தையுங்க. தைச்சு முடிஞ்சதும், துணிய திருப்பிகிட்டு, ஜிப்பரோட ரெண்டாவது பக்கத்தை இன்னொரு ஓபனிங்கல தையுங்க. ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்கணும். இப்ப ஜிப்பர டிரஸ்ல வெச்சு தைச்சாச்சு. கூடுதலா, ரெண்டு பக்கங்கள்லயும் ஜிப்பர் ‘டி’-ன் க்ரூவ்ல ஒரு ரவுன்ட் தையலும் போடுவோம்.

நீங்க தைச்சு முடிச்சது பாக்க இப்படி இருக்கணும். ஆனா இன்னமும் எல்லாம் முடிஞ்சிரல, கடைசி ஸ்டெப்பை முடிக்க, ஜிப்பர் ஃபூட்-அ ரெகுலர் ஃபூட்டுக்கு ரீபிளேஸ் பண்ணிக்கணும். மிஷினை ஜிக் ஜாக் தையலுக்கு செட் பண்ணிக்கங்க. மறுபடியும் ஜிப்பரை லைனிங் துணியோட உறுதியா அட்டாச் பண்ண அதுக்கு மேல தையுங்க. ஜிப்பரோட ரெண்டு பக்கங்கள்லயும் தையுங்க. அவ்வளவுதான் முடிஞ்சிருச்சு!

பாருங்க, இப்ப நாம ஸ்கர்ட்ட யோக்-ல ஜிப்பரோட அட்டாச் பண்ணிட்டோம்.

நீங்க விரும்பற எப்படி வேணும்னாலும் இந்த டிரெஸ்ஸ அழகு படுத்திக்கலாம். நாங்க ஒரு அழகான பூ புரெளச்-அ ஸ்லீவ்ல அட்டாச் பண்றோம், அதோட இடுப்புல ஒரு அழகான லேஸ் பீஸ் வைக்கறோம். இந்த பளபளப்பான பிங்க் டிரெஸ், மாட்சிங் ஆக்சஸரீசோட உங்க குட்டி பொண்ணு உண்மைல இளவரசி மாதிரி உணர்வாள். இந்த டுடோரியல் எப்படி இருக்குங்கறதை கீழ உள்ள கமென்ட் பகுதில தெரிவிங்க, அதோட வேற என்ன பாக்க விரும்பறீங்கன்னு சொல்லுங்க. இதை உங்க டைலர் நண்பர்களோட ஷேர் பண்ணிக்க மறந்துராதீங்க.